भारत का राजपत्र
# The Gazette of India
इந்திய அரசிதழ்

असाधारण
**EXTRAORDINARY**
சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1
**Part XV Section 1**
பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित
**PUBLISHED BY AUTHORITY**
அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 14 फिब्रारी, 1994/1916 शक
New Delhi, Monday, 14th February 1994
*புது தில்லி, 1994ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் தேதி, திங்கட்கிழமை*

## Ministry of Law, Justice and Company Affairs
(Legislative Department)
New Delhi.

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*
*(சட்டத்துறை)*
*புது தில்லி.*

The translation in Tamil of the Partition Act, 1893 (4 of 1893), The Drugs (Control) Act, 1950 (26 of 1950), The Hindu Succession Act, 1956 (30 of 1956), The Employer's Liability Act, 1938 (24 of 1938), The Equal Remuneration Act, 1976 (25 of 1976), The Indecent Representation of Women (Prohibition) Act, 1986 (60 of 1986), The Hindu Minority and Guardianship Act, 1956 (32 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பாகப்பிரிவினைச் சட்டம், 1893 (4/1893), மருந்துப்பொருள்கள் (கட்டுப்பாடு) சட்டம், 1950 (26/1950), இந்து இறங்குரிமைச் சட்டம், 1956 (30/1956), பணியமர்த்துநர்களின் கடப்பாட்டுச் சட்டம், 1938 (24/1938), சமமான பணியூதியச் சட்டம், 1976 (25/1976), மகளிர் தம்மை இழிவுபடுத்திக்காட்டுவதைத் (தடையுறுத்தும்) சட்டம், 1986 (60/1986), இந்து இளவர் நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டம், 1956 (32/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின் படி இவையே தமிழில் அதிகாரஉறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

31/10—1

# மகளிர்தம்மை இழிவுபடுத்திக்காட்டுவதைத் (தடையுறுத்தும்) சட்டம், 1986

(சட்ட எண் 60/1986)

[1986, டிசம்பர் 23]

விளம்பரங்கள் வாயிலாகவோ வெளியீடுகள், எழுத்துருக்கள், ஓவியங்கள், உருவங்கள் ஆகியவற்றின் வழியிலோ வேறு எந்த வகையிலோ மகளிர்தம்மை இழிவுபடுத்திக்காட்டுவதைத் தடையுறுத்துவதற்காகவும் அவற்றுடன் இணைந்த அல்லது அவற்றைச் சார்ந்த பொருட்பாடுகளுக் காகவுமான சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்தேழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :—

1. (1) இந்தச் சட்டம், மகளிர்தம்மை இழிவுபடுத்திக்காட்டுவதைத் தடையுறுத்தும் சட்டம், 1986 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழு வதையும் அளாவி நிற்கும்.

(3) இந்தச் சட்டம், மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் நாளன்று செல்லாற்றல் பெறும்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி— பொருள் வரையறைகள்.

(அ) ''விளம்பரம்'' என்பது, அறிவிப்பு, சுற்றறிக்கை, முகப்புச் சீட்டு, மேலுறை அல்லது பிற ஆவணம் எதனையும் உள்ளடக்கும், மேலும், ஒளி, ஒலி, புகை, வளி, ஆகியவற்றின் மூலம் காட்சியாகக் காட் டப்படும் எதனையும் உள்ளடக்கும் ;

(ஆ) ''பரப்பீடு'' என்பது, கட்டணமின்றியோ பிறவாறாகவோ மாதிரிகளை வழங்குதல் வாயிலாகச் செய்யப்படும் பரப்பீட்டையும் உள் ளடக்கும் ;

(இ) ''மகளிர்தம்மை இழிவுபடுத்திக்காட்டுதல்'' என்பது, ஒரு பெண்ணின் உருவம், வடிவம் அல்லது உடல் அல்லது அதன் பகுதி எதனையும் இழிவுபடுத்தும் வகையிலோ மகளிரின் மதிப்பைக் குலைக்கும், அல்லது அவர்களின் மாண்பினைக் குறைக்கும் வகையிலோ, பொது ஒழுக்க நெறி அல்லது நடத்தைப்பண்புகளைக் கேடுறச்செய்யும், சீர்கெடச் செய்யும் அல்லது நலங்கெடச் செய்யும் வகையிலோ எந்த முறையிலேனும் தீட்டிக்காட்டுதல் என்று பொருள்படும் ;

(ஈ) ''முகப்புச் சிட்டு'' என்பது, ஒரு சிப்பத்தின்மீது ஒட்டப்படும் அல்லது காணப்படும், எழுத்துவடிவிலோ, குறியீட்டுவடிவிலோ, முத்திரைவடிவிலோ, அச்சு வடிவிலோ, ஓவியவடிவிலோ, உள்ள எதுவும் என்று பொருள்படும் ;

(உ) ''சிப்பம்'' என்பது, ஒரு பெட்டி, அட்டைப்பெட்டி, தகரப்பெட்டி, அல்லது பிற கொள்கலம் என்று பொருள்படும் ;

(ஊ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி, வகுக்கப் பட்ட விதிகளின் வழி வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.

மகளிர் தம்மை இழிவுபடுத்திக் காட்டும் விளம்பரங்களைத் தடையுறுத்துதல்.

3. எவர் ஒருவரும், எந்த வகையிலும் மகளிர் தம்மை இழிவு படுத்திக் காட்டும் விளம்பரம் எதனையும் வெளியிடுதலோ வெளியிடச்செய்தலோ வெளி யிடுவதற்கு அல்லது காட்சிப் பொருளாக்குவதற்கு வழிவகை செய்தலோ அதில் பங்கேற்றலோ ஆகாது.

மகளிர் தம்மை இழிவுபடுத்திக் காட்டும் புத்தகங்கள், சிற்றேடுகள் முதலியவற்றை வெளியிடுதலையும் அஞ்சல்வழி அனுப்புதலையும் தடையுறுத்துதல்.

4. எவர் ஒருவரும், எந்த வகையிலும் மகளிர்தம்மை இழிவுபடுத்திக் காட்டும் புத்தகங்கள், சிற்றேடுகள், தாள், செருகுதகடு, படச் சுருள், எழுத்துரு, வரையுரு, ஓவியம், ஒளிப்படம், கருத்துரு அல்லது உருவங்கள் ஆகியவற்றைத் தயாரித்தலோ, தயாரிக்கச் செய்தலோ, விற்பனை செய்தலோ, வாடகைக்குவிடுதலோ, பரப்பீடு செய்தலோ, சுற்றுக்கனுப்புதலோ அல்லது அஞ்சல் வழி அனுப்புதலோ ஆகாது :

வரம்புரையாக : இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பின்வருவனவற்றிற்குப் பொருந்துவதில்லை—

(அ) புத்தகம், சிற்றேடு, தாள், செருகுதகடு, படச்சுருள், எழுத்துரு, வரையுரு, ஓவியம், ஒளிப்படம், கருத்துரு அல்லது உருவம் எதுவும்—

(i) அது அறிவியல், இலக்கியம், கலை அல்லது கல்வி அல்லது பொதுநலநோக்குடைய எதனையும் சார்ந்தது என்ற அடிப்படை யில் பொதுமக்கள் நலனுக்கு உரியது என நிறுவப்பட்ட வெளி யீடாக இருத்தல் வேண்டும் ;

(ii) அது சமய நோக்கங்களுக்காக நல்லெண்ணத்துடன் வைத்து வரப்படுவதாக அல்லது பயன்படுத்தப்படுவதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) (i) பழங்கால நினைவுச் சின்னம் மற்றும் தொல்பொருள் ஆய்விடங்கள் மற்றும் சிதைவுகள் சட்டம், 1958இன் பொருளின்படி ஒரு பழங்கால நினைவுச் சின்னம், அல்லது *(24/1958)*

(ii) ஒரு கோயில் அல்லது தெய்வச் சிலைகளை எடுத்துச் செல் வதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது சமய நோக்கங்களுக்காக வைத்துவரப்படும் அல்லது பயன்படுத்தப்படும் தேர் எதுவும்

இவற்றின் உள்ளும் புறமும் செதுக்கப்பட்ட, பொறிக்கப்பட்ட, வண்ணந்தீட்டப் பட்ட அல்லது பிறவாறு காட்டப்பட்ட எதுவும் ;

(இ) திரைப்படச் சட்டம், 1952இன் பகுதி II இன் வகையங்களின் தொடர்பாகப் பொருந்துகின்ற படச்சுருள் எதுவும். *(37/1952)*

உள்நுழைந்து சோதனையிடு வதற்கான அதிகாரங்கள்.

5. (1) வகுத்துரைக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, மாநில அரசாங்கத்தால் அதிகாரமளிக்கப்பெற்றுள்ள அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர் எவரும், தாம் அதிகாரமளிக்கப்பெற்றுள்ள பகுதியின் வட்டார எல்லைக்குள்,—

(அ) இந்தச் சட்டத்திபடி ஒரு குற்றச்செயல் இழைக்கப்பட்டுள்ளது அல்லது இழைக்கப்படுகிறது என்று அவர் நம்புவதற்குக் காரணம் கொண்டுள்ள இடத்தில், தமக்குத் தேவையெனக் கருதுகிற உதவியுடன், தகுமான நேரங்கள் அனைத்திலும் நுழைந்து சோதனையிடலாம் ;

(ஆ) விளம்பரம் அல்லது புத்தகம், சிற்றேடு, தாள், செருகுதகடு, படச்சுருள், எழுத்துரு, வரைவுரு, ஓவியம், ஒளிப்படம், கருத்துரு, உருவம், இவற்றில் எதுவும், இந்தச் சட்டத்தின் வகையங்களின் எதனையும் மீறி இருப்பதாக தாம் நம்புவதற்குக் காரணம் கொண்டிருப்பின், அதனைக் கைப்பற்றலாம் ;

(இ) கூறு (அ)வில் குறிப்பிடப்பட்ட இடம் எதனிலும் காணப்படும் பதிவணம், பதிவேடு, ஆவணம் அல்லது பிற சான்றுப் பொருட்கள் ஆகியவற்றை

ஆய்வு செய்யலாம்; மேலும், அவை இந்தச் சட்டத்தின்படி தண்டனைக்குற்ற ஒரு குற்றச்செயல் இழைத்ததற்கான சான்றனை அளிக்கும் என்பதை நம்புவதற்குக் காரணம் கொண்டிருப்பின், அவர் அவற்றைக் கைப்பற்றலாம் ;

வரம்புரையாக : இந்த உட்பிரிவின்படி, தனிப்பட்ட ஒருவரின் குடியிருப்பு இல்லத்திற்குள் சோதனைக்கான ஆணை இல்லாமல் நுழைதல் ஆகாது ;

மேலும் வரம்புரையாக : ஓர் ஆவணம், உருப்படி, பொருள் ஆகியவை அவற்றின் விளம்பரத்தையும் உள்ளடக்கங்களையும் கொண்டிருந்து, அந்த விளம்பரம் மேல்முகிழ்வாகவோ பிறவாறாகவோ இருக்கும் காரணத்தால், அவற்றிலிருந்து அவற்றின் முழுத்தன்மை, பயன்பாடு, விற்பனை மதிப்பு இவற்றைப் பாதிக்காதவகையில், அந்த விளம்பரத்தைத் தனித்துப் பிரிக்க இயலாதிருப்பின், அந்த ஆவணம், உருப்படி, பொருள் இவற்றைப் பொறுத்து, இந்த உட்பிரிவின்படியான சோதனையிடும் அதிகாரத்தைச் செலுத்தலாம்.

(2/1974) (2) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் வகையங்கள், அந்தத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 94இன்படி பிறப்பிக்கப்பட்ட சோதனைக்கான ஆணையின் அதிகாரத்தின் கீழ் செய்யப்படும் சோதனைக்கு அல்லது கைப்பற்றுதலுக்குப் பொருந்துவது போன்றே, இந்தச் சட்டத்தின்படி இடப்படும் சோதனைக்கும் அல்லது கைப்பற்றுதலுக்கும், இயலுமளவுக்குப் பொருந்தும்.

(3) ஒரு நபர், உட்பிரிவு (1)இன் கூறு (ஆ)வின் அல்லது கூறு (இ)இன்படி எதனையும் கைப்பற்றுகிறவிடத்து, அவர், கூடிய விரைவில், அருகிலுள்ள குற்றவியல் நடுவருக்குத் தெரிவிப்பதுடன், அதனைக் கையுடைமையில் வைப்பதற்கான குற்றவியல் நடுவருடைய ஆணைகளையும் பெறுதல் வேண்டும்.

6. பிரிவு 3 இன் அல்லது பிரிவு 4 இன் வகையங்களை மீறுகிற நபர் எவரும், அவர்மீது முதன்முறையாகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும்போது, இரண்டாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்றும், இரண்டாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டமும், இரண்டாவது அல்லது அடுத்து வரும் குற்றத்தீர்ப்பின் நேர்வில், ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கு, ஆனால் ஐந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் சிறைத்தண்டனையுடன், பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் ஆனால், ஓர் இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத் தண்டமும் விதிக்கப்படும் தண்டனைக்குற்றவரராவார். தண்டனை.

7. இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்று நிறுமத்தால் இழைக்கப்பட்டிருக்கிறவிடத்து, அந்தக் குற்றச்செயல் இழைக்கப்பட்டபோது, அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொறுப்பினைக் கொண்டிருந்தவரும் அந்நிறுமத்திற்குப் பொறுப்பாக இருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அவருடன் அந்த நிறுமமும், அந்தக் குற்றச்செயலை இழைத்ததாகக் கொள்ளப்பெறுவார்; மேலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் உட்பட்டவர் ஆவார் ; நிறுமங்களால் இழைக்கப்படும் குற்றச் செயல்கள்.

வரம்புரையாக : நபர் எவரும் தமக்குத் தெரியாமல் குற்றச்செயல் இழைக்கப்பட்டது என்றோ, அத்தகைய குற்றச்செயல் இழைக்கப்பட்டதைத் தடுப்பதற்காகத் தம்மால் உரிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன என்றோ மெய்ப்பிப்பாராயின், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அவரைத் தண்டனை எதற்கும் உட்படுத்துவது ஆகாது.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதுவும் ஒரு நிறுமத்தினால் இழைக்கப்பட்டிருந்து அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலரின் இசைவுடனோ மறைமுக ஆதரவுடனோ அவர்பாலுள்ள அசட்டையின் காரணமாகவோ அந்தக் குற்றச்செயல் இழைக்கப்பட்டுள்ளது என மெய்ப்பிக்கப்படுமிடத்து, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் அதற்கிணங்கத் தண்டிக்கப்படுவதற்கும் உட்பட்டவர் ஆவார்.

விளக்கம்.—இந்தப் பிரிவினைப் பொறுத்தவரை,—

(அ) ''நிறுமம்'' என்பது, கூட்டுருமம் எதுவும் என்று பொருள்படும், மேலும், ஒரு நிறுமத்தையும் பிற தனிநபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும் ; மற்றும்

(ஆ) ஒரு நிறுவனத்தின் தொடர்பாக ''இயக்குநர்'' என்பது, அந்நிறுவனத்தில் ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

*பிடியாணை வேண்டாத மற்றும் பிணையத்தில் விடுதற்குரிய குற்றச்செயல்கள்.*

8. (1) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், இந்தச் சட்டத்தின்படி தண்டனைக்குற்ற குற்றச் செயல் எதுவும் பிணையத்தில் விடுதற்குரியதாகும். (2/1974)

(2) இந்தச் சட்டத்தின்படி தண்டனைக்குற்ற குற்றச்செயல் எதுவும் பிடியாணை வேண்டாத குற்றச்செயலாகும்.

*நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.*

9. இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படுவதாகக் கருதப்பட்ட எதனையும் எதிர்த்து மைய அரசாங்கத்தின் மீதோ மாநில அரசாங்கத்தின் மீதோ மைய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் அலுவலர் எவரின் மீதோ உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

*விதிகள் வகுப்பதற்கான அதிகாரம்.*

10. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்துவதற்கான விதிகளை வகுக்கலாம்.

(2) மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள், குறிப்பாக, பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அவற்றுள் எதற்குமோ வகை செய்யலாம்.—

(அ) விளம்பரங்களை அல்லது பிற பொருள்களைக் கைப்பற்ற வேண்டிய முறை. மற்றும் விளம்பரங்களும் மற்ற பொருள்களும் எவரது பொறுப்பில் இருந்து கைப்பற்றப்பட்டனவோ அவரிடம் பற்றுகைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வழங்கப்படவேண்டிய முறை ;

(ஆ) வகுத்துரைக்கப்படுவதற்கு வேண்டுறுத்தப்படும் அல்லது வகுத்துரைக்கப்படும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும் அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், முப்பது நாட்கள் கொண்ட ஒரு மொத்தக் காலஅளவிற்கு ஒரு கூட்டத் தொடராகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும், மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.